சுவாமி விபுலாநந்தர் ஒரு பன்முக சிந்தனையாளர்

கலாநிதி க.ஞானரெத்தினம்
சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப்பீடம், திறந்த பல்கலைக்கழகம்

அறிமுகம்:

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் ஆன்மீக குரு, தமிழ் பேராசிரியர் , தத்துவ ஞானி, கல்வி மறுமலரச்சியாளர் , சமூக சீர்திருத்தவாதி, மற்றும் துார நோக்கு உடையவர் என பல வகிபாகங்களைக் கொண்ட ஒரு ஆத்மிகத் துறவி.

சுவாமி விபுலாநந்தரின் வாழ்வு, செயற்பாடுகள் மற்றும் போதனைகள் சமகால இளைஞர்களுக்கு தேவையான திறன் கல்வி , ஆங்கிலக் கல்வி, ஒழுக்க மேம்பாடு, சமூகப் பற்று மற்றும் ஆன்மீகத் தேடல் ஆகியவற்றுக்கு சிறந்த வழிகாட்டியாக உள்ளன. இதற்கு மேலதிகமாக அவரது கருத்துகள் காலத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் மற்றும் எல்லா தலைமுறையினருக்கும் ஊக்கமளிப்பவையாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக சுவாமி விபுலாநந்தரின் பணிகள் இலங்கையின் கல்வி, கலை மற்றும் ஆன்மீகத் துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. விசேடமாக சுவாமி அவர்கள் இசை-விஞ்ஞான ஆய்வு நுாலான யாழ்நுாலை எழுதி உலகப் புகழ் பெற்றவர். அத்துடன் ஆத்மீகம், அறநெறி மற்றும் கல்வி மறுமலர்சியினை நோக்காகக் கொண்டு இலங்கையில் ராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்ததோடு மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு விவேகானந்தா கல்லுாரி, காரைதீவு சாரதா வித்தியாலயம், திருமலை இந்துக்கல்லுாரி மற்றும் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா கல்லுாரி ஆகிய பாடசாலைகளை நிறுவி அவற்றின் வளர்ச்சிக்கு அற்பணிப்புடன் பங்காற்றினார். இத்தகைய பெருமைக்குரிய சுவாமி விபுலாநந்தரின் பன்முக சிந்தனையின் நான்கு முக்கிய அம்சங்கள் இங்கு முன்வைக்கப்படுகின்றன.

1. இலங்கையில் ராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்தமை:

சுவாமி விபுலாநந்தர் அவர்களின் மிக உயர் துார நோக்கு சிந்தனை இதுவாகும். இதற்கான பிரதான நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

- ஆன்மீக ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல்

  தெய்வத் திருமூவர்களான ராமகிருஷ்ண பரமஹம்சர், அன்னை சாரதாதேவி மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் போதனைகளை இலங்கை மக்களிடையே பரப்பி அனைவருக்கும் சர்வமத சிந்தனையை ஏற்படுத்துதல். இதனுாடாக இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய மக்களிடையே சமரசத்தை பேணல்.

- கல்வி மற்றும் சமூக மேம்பாடு

ராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகள், ஆச்சிரமங்கள் மற்றும் சேவை மையங்களை நிறுவுதல். இதனூடாக ஏழை மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கான இலவசக் கல்வியை வழங்குதல் மூலம் கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்துதல். முக்கியமாக பெண்கள் கல்வி, ஆங்கிலக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி என்பனவற்றை ஊக்குவித்தல்.

- அறிவியல் மற்றும் ஆன்மீகத்தின் ஒருங்கிணைப்பு

சுவாமி விபுலாநந்தர் கணிதம், விஞ்ஞானம் போன்ற அறிவியல் துறைகளில் ஆர்வம்

கொண்டவர். இதனூடாக ‘‘அறிவியல் முன்னேற்றமும் ஆன்மீக வளர்ச்சியும் ஒன்றானவை’’ என்பதை நிரூபிக்க முயன்றார்.

- இலங்கைத் தமிழர் பண்பாட்டைப் பாதுகாத்தல்

தமிழ் மொழி, இலக்கியம், இசை மற்றும் நாடகம் என்பனவற்றை வளர்த்தெடுத்தல்.

முக்கியமாக பாரம்பரியக் கலைகள் மற்றும் தத்துவ ஆய்வுகளுக்கு ஆதரவு அளித்தல்.

- தேசிய ஒற்றுமை மற்றும் சுயமரியாதை

இலங்கையில் மத ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துதல்.

இளைஞர்களிடம் உடன்பாடான மனப்பாங்கு, தன்னம்பிக்கை, சேவை மனப்பான்மை மற்றும் தியாக உணர்வை ஊட்டுதல்.

- சமூக சீர்திருத்தம்

சாதி, மத வேறுபாடுகளை நீக்கி மக்களிடையே ஒற்றுமையை ஊக்குவித்தல், மற்றவர்களை நேசித்தல், உதவுதல், உயிர்களிடத்தில் அன்பு கொள்ளல் போன்ற உயர் விழுமியங்களை ஊக்குவித்தல்.

2. தூர நோக்குக் கொண்ட கல்விச் சிந்தனைகள்

சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள் சமகாலக் கல்வி முறைக்கு மிகவும் பொருத்தமானவையாக கருதப்படுகின்றது. இவரது சிந்தனைகளின் சில முக்கிய அம்சங்களையும், அவை தற்காலத்திற்கு எவ்வாறு பொருந்துகின்றன என்பதும் தொடர்ச்சியாக ஆராயப்படுகின்றது.

- அனைவருக்கும் கல்வி

சுவாமி விபுலாநந்தர் கல்வி என்பது அனைவருக்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமை என்று வலியுறுத்தினார். 1990 ஆம் ஆண்டு ஜொம்ரைன் மகாநாட்டில் முன்வைக்கப்பட்ட எல்லோருக்கும் கல்வி (EFA)போன்ற உலகளாவிய நோக்கங்களுடன் இது ஒத்துப்போகிறது.

- மனிதநேயம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த கல்வி

கல்வியானது ஒருவரின் ஒழுக்கம், மனிதநேயம் மற்றும் ஆன்மீக சிந்தனைகளை வளர்க்க வேண்டும் என்று கருதினார்.

- வாழ்க்கைத் திறன் கல்வி

கல்வி என்பது வாழ்க்கையின் தேவைகளுடன் இணைந்ததாகவும் தொழில் வாய்ப்புக்களையும் வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று சுவாமி விபுலாநந்தர் வலியுறுத்தினார். இதற்குத் திறன்விருத்தி , செயற்பாட்டுக் கற்றல் என்பவை முக்கியமெனக் கருதினார்.

- அழகியல் கல்விக்கு அதிக முக்கியத்துவம்

இயல், இசை, நாடகம், ஓவியம் போன்ற அழகியல் கல்வியை பாடசாலைப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். உள்ளத்தைப் பண்படுத்தி எண்ணத்தின் உயர்வுக்கு வழி சமைப்பது அழகியற் கல்வி என்பது அடிகளாரின் கருத்தாகும். பல ஆண்டுகளாக இசை ஆராய்ச்சியில் ஈடுபட்டதன் விளைவாக யாழ் நூலையும் மதங்க சூளாமணி எனும் நாடகத் தமிழ் நூலையும் உருவாக்கினார். இது அடிகளாரின் அழகியல் கல்விப் புலமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்விரு நூல்களும் அகில உலகும் போற்றும் நூல்களாகச் சிறப்புப் பெற்றுள்ளன.

- பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் கல்வி

பெண்களின் வளர்ச்சியே ஒரு சமுகத்தின் வளர்ச்சி என்பதனை உணர்ந்து பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

- ஆசிரியர்களின் தகுதி மற்றும் மாணவர் மைய அணுகு முறை

ஆசிரியர்கள் தகுதி வாய்ந்தவர்களாகவும், மாணவர்களின் தனித்துவ தேவைகளைப் புரிந்துகொள்பவர்களாகவும் இருப்பது அவசியம் எனக் கருதினார். வகுப்பறைச் செயற்பாடுகளில் மாணவர்மைய கற்பித்தல் முறையே பொருத்தமானது எனவும் கருதினார். இதற்காக ஆசிரியர்களுக்கு வாண்மைத்துவப் பயிற்சி கட்டாயமானது எனவும் வலியுறுத்தினார்.

3. ஆங்கிலக் கல்விக்கு முன்னுரிமை:

சுவாமி விபுலாநந்தர் ஒரு சமநிலைக் கல்விக் கொள்கையைப் பின்பற்றினார். அவர் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் கலைகளைப் பாதுகாப்பதில் ஆர்வமாக இருந்தாலும், நவீன காலத்தின் தேவைகளைப் புரிந்துகொண்டு ஆங்கிலக் கல்வியையும் ஊக்குவித்தார். இந்த இருமொழிக் கல்வி மூலம் தமிழ் சமூகம் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் உலகளாவிய அறிவில் முன்னேற முடியும் என்று அவர் நம்பினார். இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் செயற்பாடுகளை முன்மொழிந்தார்.

- ஆங்கிலம் மூலம் அறிவியல் மற்றும் நவீன கல்வியை ஊக்குவித்தல்

ஆங்கில மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் தொழினுட்பம் என்பனவற்றில் தர்க்கரீதியான சிந்தனையை ஊக்குவித்தார். இது தமிழ் மாணவர்களை சர்வதேசத்துடன் இணைய உதவியது.

- இரு மொழிக் கல்வி முறையை ஆதரித்தல்

தமிழ் மற்றும் ஆங்கிலம் இரண்டையும் சேர்த்து கற்பிக்கும் முறையை அவர் வலியுறுத்தினார். தாய் மொழியான தமிழைப் புறக்கணிக்காமல், ஆங்கிலத்தை ஒரு மேலதிக மொழியாகக் கற்பது அவரது கல்விக் கொள்கையாக இருந்தது.

- கல்வி நிறுவனங்கள் மூலம் ஆங்கிலப் பயிற்சி

தன்னுடன் தொடர்புடைய கல்வி நிறுவனங்களில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தினார்.

ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவதன் மூலம் மாணவர்கள் உயர் படிப்புகளுக்கும், அரசுப் பணிகளுக்கும் தகுதியாக்கப்படுவார்கள் என்று நம்பினார்.

- சமூக முன்னேற்றத்திற்கான ஆங்கிலத்தின் பங்கு

ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் அதிகாரம் மற்றும் வேலைவாய்ப்புகளுடன் இணைக்கப்பட்டிருந்ததால், அவர் அதை ஒரு கட்டாய தேவையான திறனாகக் கருதினார். ஆங்கிலக் கல்வி மூலம் தமிழ் இளைஞர்கள் சமூகப் பின்னணியை மீறி முன்னேற முடியும் என்று வலியுறுத்தினார்.

4. சுவாமி விபுலாநந்தரின் தூரநோக்கு:

சுவாமி விபுலாநந்தரின் தூரநோக்கு இன்றைய சமூகத்திற்கும் பொருத்தமானதாக உள்ளது, குறிப்பாக ஒற்றுமை, நீதி மற்றும் ஆன்மீக அடிப்படையிலான மனித முன்னேற்றம் குறித்த அவரது சிந்தனைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

- ஆன்மீக ஒருமைப்பாடு

அனைத்து மதங்களின் அடிப்படை உண்மைகளும் ஒன்றே என்பதை வலியுறுத்தினார். இதன் மூலமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என வலுவாக நம்பினார். வேதாந்தம் மற்றும் உலகளாவிய மத ஒற்றுமை குறித்தும் போதித்தார்.

- மனித முன்னேற்றம்

கல்வி, விஞ்ஞானம் மற்றும் ஆன்மீகத்தின் இணைவு மூலம் மனிதகுலம் முன்னேற வேண்டும் என்பது அவரது நம்பிக்கை. ‘‘தனி மனிதன் உயர்வதன் மூலம் உலகம் உயர வேண்டும்’’ என்பது அவரின் கொள்கை.

- சமூக சீர்திருத்தம்

சாதி, மத, இன வேறுபாடுகளை அகற்றி சமத்துவ சமூகம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். பெண்கள் முன்னேற்றம் , அங்கிகாரம் மற்றும் அவர்களது உரிமைகள் போன்றவற்றை ஆதரித்தார்.

- அறிவியல் மற்றும் ஆன்மிகத்தின் ஒருங்கிணைப்பு

அறிவியல் முன்னேற்றம் ஆன்மிக மதிப்புகளுடன் இணைந்து செல்ல வேண்டும் என்பது அவரது தூரநோக்கு. நவீன தொழில்நுட்பத்தை நிறைவாகப் பயன்படுத்தி தனி மனிதன் வளர வேண்டும் என்று கருதினார்.

- உலக அமைதி

அன்பு, அகிம்சை மற்றும் புரிந்துணர்வு வழியே உலக சமாதானம் அமையும் என்பது அவரது நம்பிக்கை.”மனிதனின் உண்மையான முன்னேற்றம் ஆன்மீக விழிப்பில் தான் அடங்கியுள்ளது’’ என்பதனையும் உறுதியாக நம்பினார்.

முடிவுரை :

”உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது” என்பது சுவாமி விபுலாநந்தரின் முத்தான மொழியாகும். உடல், செயற்பாடு மற்றும் சடங்கு அனைத்தையும் மேவி உளச்செயற்பாட்டின் முக்கியத்துவத்தை சுவாமி அவர்கள் எடுத்துக் காட்டுகின்றார். இக் கருத்து சுவாமி அவர்களின் உளவியற் சிந்தனைக்குச் சான்றாகும்.

கல்வி, மக்களை சேவைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்றும் இதனால் ‘‘கற்றோர் சமுதாயமே சான்றோர் சமுதாயம்” என்பதும் சுவாமியின் சீரிய கருத்தாகும். சுவாமி விபுலாநந்தரின் ஒவ்வொரு கருத்துக்களும் ஆழமானவையும் தீர்க்க தரிசனம் மிக்கவையுமாகும். தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற கல்வி உரிமைகள், சமவாய்ப்புக்கள், சுயமொழிக்கல்வி ,

இருமொழிக் கல்வி மற்றும் தொழிநுட்ப கல்வி என்பவை பற்றி எல்லாம் சுவாமி அவர்கள் பல வருடங்களுக்கு முன்னரே கூறியுள்ளார்கள்.

சுவாமி அவர்கள் மக்களின் வாழ்வியலில் எல்லாத்துறைகளிலும் வல்லமை உள்ளவராகத் திகழ்ந்தார். தமிழ்மொழி, ஆங்கில மொழி இரண்டிலும் பாண்டித்தியம் பெற்றதுடன் சமுக உயர்வுக்கான சிந்தனையிலும் விழிப்புணர்வுடனும் செயற்பட்ட ஒரு துறவி அவர். அத்துடன் வித்தகர் என்பது சுவாமியின் புலமைக்கு கிடைத்த ஒரு முத்தான மகுடமாகும். அனைத்துக்கும் மேலாக சுவாமி அவர்கள் ஒரு ‘‘பன்முக சிந்தனையாளர்’’ என்பதனை உலக சமுகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்பதே உண்மையாகும்.